Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 216 | உள்ளூர் - 04.08.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 216 | வெளியூர் - 05.08.2026 | புதன்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

மறைந்திருக்கும் ஆளுமையின் ரகசியம்?

இன்சூரன்ஸ் நிறுவனத்தில் 500 பணியிடங்கள்!

தமிழக பா.ஜ.க. தலைவர் மாற்றம்?

அஜித் குமாரின் கிளாடியேட்டர்ஸ்!

## அமெரிக்காவுடன் தற்போது பேச்சு இல்லை: ஈரான் திட்டவட்டம்!



'ஈரான் மீதான தாக்குதல்களைக் கைவிடுவதற்கு அமைதிப் பேச்சுவார்த்தையே காரணம்' என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூறியிருந்த நிலையில், ஈரான் அதை முற்றிலுமாக மறுத்துள்ளது. ஈரானை அமைதிப் பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வரும் வகையில், அந்நாடு மீது மிகப் பெரிய அளவில் தாக்குதல்கள் நடத்தப்போவதாக டிரம்ப் கடந்த சில நாள்களாக தெரிவித்து வந்தார்.

இந்நிலையில், 'ஏர் ஃபோர்ஸ் ஒன்' விமானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், 'எனக்கு அமைதி ஒப்பந்தத்தை இறுதி செய்வதில்தான் விருப்பம்; மக்களைக் கொல்ல விரும்பவில்லை. திங்கள்கிழமை பிற்பகல் முதல் ஈரானுடன் பேச்சு தொடங்குகிறது' என்றார்.

ஓமனுடன் மட்டுமே பேச்சு: டிரம்பின் இந்தக் கூற்றை ஈரான் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பாகேயி நிராகரித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் 'அமெரிக்காவுடன் எந்தப் பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை; வெளிநாட்டுப் பிரதிநிதிகளைச் சந்திக்கும் திட்டமும் இல்லை. மேலும், வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி மத வழிபாட்டுக்காக இராக் சென்றுள்ளதால், இந்த வாரம் முழுவதும் அவர் பணியில் இருக்க மாட்டார்.

தற்போது ஓமன் நாட்டுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. சர்வதேச கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு வர்த்தகத்தில் முக்கியப் பங்காற்றும் ஹோர்முஸ் நீரிணையில் தற்காலிகமாகப் பாதுகாப்பான கடல்பாதையை உருவாக்குவது குறித்து மட்டுமே ஓமனுடன் விவாதிக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்காவின் தாக்குதல்கள் தொடரும் வரை நிலைமை மாறாது என்பதால், ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறப்பதற்கு ஓமனுடன் ஓர் ஒப்பந்தத்தை எட்டுவது மட்டும் போதுமானதல்ல.' என்றார்.

ஈரான் தலைவர்கள் இரட்டை வேடம்– டிரம்ப்: ஈரானின் இந்த மறுப்பைத் தொடர்ந்து, 'ட்ரூத்' சமூக ஊடகப் பதிவில் டிரம்ப் கடுமையான விமர்சனத்தை முன்வைத்தார். ஈரான் தலைவர்கள் இரட்டை வேடம் போடுவதாகவும், ஹோர்முஸ் நீரிணை அமெரிக்க கடற்படையின் முழு கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டார்.

பின்னணி: கடந்த பிப்ரவரி மாத இறுதியில், ஈரானுக்கு எதிராக 'ஆபரேஷன் எபிக் ஃப்யூரி' ராணுவ நடவடிக்கையை அமெரிக்கா இஸ்ரேலுடன் இணைந்து தொடங்கியது. இதையடுத்து, ஈரானின் ஹோர்முஸ் நீரிணை முடக்கத்தால், உலக அளவில் எரிபொருள் விலை உயர்ந்து, பொருளாதாரத்தில் கடுமையான தாக்கம் ஏற்பட்டது. இந்நிலையில், கடந்த ஜூன் மாத மத்தியில் எட்டப்பட்ட இடைக்கால ஒப்பந்தத்தையடுத்து, தாக்குதல்கள் ஓய்ந்திருந்தன. ஆனால், ஹோர்முஸ் நீரிணையில் தாங்கள் அங்கீகரிக்காத வழிதடத்தில் சென்ற சரக்குக் கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதையடுத்து, மீண்டும் மோதல் வெடித்தது.

ஈரானுக்கான எதிரான இப்போரைத் தொடங்கியதற்கு முக்கியக் காரணங்களான அந்நாட்டின் அணுசக்தித் திட்டத்தை முடக்குவது மற்றும் பிராந்தியத்தில் அதன் செல்வாக்கைக் குறைப்பது போன்ற டிரம்ப்பின் நோக்கங்கள் இன்னும் முழுமையாக நிறைவேறவில்லை.

எனினும், இப்போரால் நீடித்த பாதிப்புகளைச் சந்தித்து வரும் மேற்காசிய வளைகுடா நாடுகளின் கோரிக்கையில் தாக்குதல்களை நிறுத்திக்கொள்ள டிரம்ப் முடிவெடுத்துள்ளார். ஆனால், ஈரான் தங்களின் உறுதியான நிலைப்பாட்டில் தொடர்வதால் பதற்றமான சூழல் நீடிக்கிறது.

## யுபிஐ-ல் புதிய விதி!

# எம்டிஆர்-க்கு அரசு பச்சைக்கொடி! வணிகர்களுக்கு கட்டணம் அமல்?

## பொதுமக்களுக்கு இலவச சேவை தொடரும்!



புதுடெல்லி, ஆக. 04–

இந்தியாவில் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளின் முதன்மை தளமாக உருவெடுத்துள்ள UPI சேவையில் முக்கிய மாற்றம் கொண்டுவர மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. வணிகர்களுக்கான Mer–chant Discount Rate (MDR) கட்டணத்தை மீண்டும் அமல்படுத்தும் வகையில், தற்போது நடைமுறையில் உள்ள ஜீரோ MDR சட்டத்தில் திருத்தம் செய்ய புதிய மசோதா முன்வைக்கப்பட்டுள்ளது.

2020–ம் ஆண்டு முதல் UPI பரிவர்த்தனைகளுக்கு MDR கட்டணம் ரத்து செய்யப்பட்ட நிலையில், வங்கிகள் மற்றும் டிஜிட்டல் கட்டண சேவை நிறுவனங்கள் சந்தித்து வரும் பராமரிப்பு மற்றும் உள்கட்டமைப்பு செலவுகளை கருத்தில் கொண்டு இந்த மாற்றம் பரிசீலிக்கப்படுகிறது. முதற்கட்டமாக அனைத்து UPI பரிவர்த்தனைகளுக்கும் அல்லாமல், பெரிய வணிக நிறுவனங்களுக்கு மட்டுமே MDR கட்டணம் விதிக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த மாற்றத்தால் பொதுமக்கள் UPI மூலம் பணம் செலுத்துவதற்கு கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டியதில்லைஎன்றும், வழக்கம்போல இலவச சேவை தொடரும் என்றும் கூறப்படுகிறது.

தற்போது இந்தியாவில் நடைபெறும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் சுமார் 88 சதவீதம் UPI வழியாகவே நடைபெறுகிறது. எனவே, டிஜிட்டல் கட்டண அமைப்பை நீடித்த முறையில் செயல்படுத்துவதற்கான முக்கிய நடவடிக்கையாக இந்த MDR மாற்றம் பார்க்கப்படுகிறது.

## ஒருபுறம் உதயநிதி கைது.. மறுபுறம் செந்தில்பாலாஜி..! பரபரப்பான தமிழக அரசியல்...!!





சென்னை, ஆக. 04–

தமிழக அரசியலில் அடுத்தடுத்து அரங்கேறும் முக்கிய நிகழ்வுகளால் சென்னை மாநகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. ஒருபுறம் திமுக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு தஞ்சாவூருக்கு அழைத்துச் செல்லப்படும் நிலையில், மறுபுறம் நிபந்தனை ஜாமீனில் உள்ள முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் கையெழுத்திடத் தனது சகோதரருடன் வருகை தந்தார்.

தஞ்சாவூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பேசிய உரையின் அடிப்படையில் எழுந்த சர்ச்சை புகாரைத் தொடர்ந்து, எதிர்க்கட்சித் தலைவரும் திமுக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலினை காவல்துறையினர் சென்னையில் கைது செய்தனர்.

அவரது வீட்டு வாசலில் திமுக வழக்கறிஞர்கள் மற்றும் தொண்டர்கள் திரண்டு தீவிர வாக்குவாதத்தில் ஈடுபட்ட போதிலும், காவல்துறை அவரைக் கைது செய்து வாகனத்தில் தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்றது. இதைக் கண்டித்து மாநிலம் தழுவிய அளவில் திமுகவினர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த பரபரப்பான நிகழ்வுகள் ஒருப க்கம் போய்க்கொண்டிருக்க, வழக்கின் நிபந்தனை ஜாமீன் உத்தரவின்படி, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தனது சகோதரர் அசோக்குமாருடன் திருவல்லிக்கேணி காவல் நிலையத்திற்கு வருகை தந்தார். வழக்குநிபந்தனைகளின்படி, தினமும் காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றவே அவர் அங்கு வருகை புரிந்தார். செந்தில் பாலாஜி மற்றும் அவரது சகோதரர் அசோக்குமார் இருவரும் காவல் நிலையத்திற்கு வந்து பதிவேட்டில் தங்களது கையொப்பத்தைப் பதிவு செய்துவிட்டுச் சென்றனர்.

திமுகவின் முக்கிய தலைவர்கள் மீதான அடுத்தடுத்த சட்ட நடவடிக்கைகள் மற்றும் காவல் நிலைய ஆஜர் நிகழ்வுகள், தமிழக அரசியலிலும் காவல்துறை வட்டாரத்திலும் ஒரே நேரத்தில் பெரும் அதிர்வலைகளையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

## இந்தியா உட்பட 59 நாடுகள் மீது வரி விதித்த விவகாரம்; 25 அமெரிக்க மாகாணங்கள் டிரம்ப் மீது வழக்கு!



அமெரிக்கா, ஆக. 04–

அமெரிக்காவின் 25 மாகாணங்கள் டிரம்ப் அரசுக்கு எதிராக இணைந்து வழக்கைத் தொடுத்துள்ளன. இதில் சுங்க வரி உயர்வு, வர்த்தகச் சட்டம் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் ஆகியவை முக்கியக் காரணங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அமெரிக்க அதிபராக டிரம்ப் பொறுப்பேற்ற நாளில் இருந்து பல்வேறு உலக நாடுகள் மீது அதிக வரிகளை விதித்து வருகிறார். பொருட்கள் உற்பத்தியில் கட்டாய உழைப்பு பயன்படுத்தப்படுவது தொடர்பான விவகாரத்தில், கடந்த மாதம் இந்தியா உட்பட 59 நாடுகள் மீது வரிகளை விதித்தார். இது தொடர்பாக அமெரிக்காவின் 25 மாகாணங்கள் சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தில் இணைந்து வழக்கு தொடுத்துள்ளன.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறும் வகையில், வர்த்தகச் சட்டத்தின் பிரிவு 301–ஐ டிரம்ப் அரசு தவறாகப் பயன்படுத்துகிறது. இந்த சுங்க வரி நடவடிக்கையை உடனடியாகத் தடுத்து ரத்து செய்ய வேண்டும் என்பதுடன், வசூலிக்கப்பட்ட வரியைத் திரும்ப வழங்க வேண்டும் என வழக்கு தொடர்ந்த மாகாணங்கள் தெரிவித்துள்ளன.

டிரம்ப் நிர்வாகத்தின் மீது வழக்குத் தொடர்ந்த மாகாணங்கள் பட்டியல்;

* அரிசோனா,
* கலிபோர்னியா,
* கொலராடோ,
* கனெக்டிகட்,
* டெலாவேர்,
* ஹவாய்,
* இல்லினாய்ஸ்,
* கென்டக்கி,
* மெய்ன்,
* மேரிலாந்து,
* மாசசூசெட்ஸ்,
* மிச்சிகன்,
* மினசோட்டா,
* நெவாடா,
* நியூ ஜெர்சி,
* நியூ மெக்சிகோ,
* நியூயார்க்,
* வட கரோலினா,
* ஒரிகன்,
* பென்சில்வேனியா,
* ரோட் தீவு,
* வெர்மான்ட்,
* வர்ஜீனியா,
* வாஷிங்டன்,
* விஸ்கான்சின்.

## உதயநிதி ஸ்டாலின் / ஓபிஎஸ் கைது!



சென்னை, ஆக. 04–

தஞ்சையில் தி.மு.க. சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது நடிகை திரிஷா குறித்து எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இதுதொடர்பாக உதயநிதி ஸ்டாலின் மீது தேசிய மகளிர் ஆணையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் உதயநிதிக்கு எதிராக மாநிலம் முழுவதும் த.வெ.க.வினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

த.வெ.க தொண்டர்களின் முற்றுகை போராட்டம், அசம்பாவிதங்கள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் சென்னை நீலாங்கரையில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் வீட்டை சுற்றி சென்னை தெற்கு இணை ஆணையர் தலைமையில் காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்படலாம் என்ற தகவல் பரவியதையடுத்து நீலாங்கரை பகுதியில் பதற்றமான சூழல் நிலவியது.

இதற்கிடையே, ஆபாசமாக பேசியதாக உதயநிதி மீது 6 பிரிவுகளின் கீழ் தஞ்சை போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

தஞ்சை காவல்துறை உதயநிதியை கைது செய்ய முனைப்பு காட்டிவரும் நிலையில், சட்ட நடவடிக்கையில் ஈடுபடுவதை தடுக்கும் வகையில் உதயநிதி தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் முறையீடு செய்யப்பட்டது.

அவசர வழக்காக விசாரிக்க கோரிய முறையீட்டை ஏற்று நண்பகல் 12 மணிக்கு விசாரிப்பதாக சென்னை ஐகோர்ட் நீதிபதி தெரிவித்துள்ளார். மதியம் 12 மணி வரை உதயநிதி விவகாரத்தில் நடவடிக்கை வேண்டாம் எனவும் காவல்துறையிடம் தெரிவிக்க நீதிபதி அறிவுறுத்தி உள்ளார்.

இந்நிலையில் நீலாங்கரை இல்லத்தில் வைத்து எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டார். உதயநிதியை கைது செய்து தஞ்சை மாவட்ட காவல்துறையினர் அழைத்து சென்றனர்.

முதலமைச்சர், நடிகை குறித்து இரட்டை அர்த்தத்தில் ஆபாசமாக பேசியதாக எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி கைது செய்யப்பட்டுள்ளார்.

நண்பகல் 12 மணி வரை கைது செய்ய வேண்டாம் என ஐகோர்ட் நீதிபதி அறிவுறுத்திய நிலையில் உதயநிதி கைது செய்யப்பட்டார்.

### ஓபிஎஸ் கைது

தேனியில் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், உதயநிதியின் கைதைக் கண்டித்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதையடுத்து காவல்துறையினர் ஓபிஎஸ் மற்றும் அவருடன் இருந்த திமுக நிர்வாகிகளைக் கைது செய்துள்ளனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.




ஆடி பெருக்கை முன்னிட்டு காளவாசலில் உள்ள வைகை ஹோண்டா ஷோரூமில் புதிய வாகனம் எடுத்த வாடிக்கையாளர்களுக்கு வாகனம் டெலிவரி தரப்பட்டது. படத்தில் மேனேஜர் முத்துவேல் மற்றும் வாடிக்கையாளர் டாக்டர் ஈஸ்வர் பாண்டியராஜன்.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 04.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 19-ம் தேதி

## ஏஐ யுகத்தில் 'பெஞ்ச்' கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளியா?



இந்தியாவின் முன்னணி ஐடி நிறுவனங்களான டிசிஎஸ், இன்போசிஸ், ஹெச்சிஎல் டெக் உள்ளிட்டவை, திட்டமின்றி காத்திருக்கும் 'பெஞ்ச்' (Bench) ஊழியர்களின் எண்ணிக்கையை கணிசமாகக் குறைக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளன. இதுவரை ஒரு பாதுகாப்பு ஏற்பாடாக கருதப்பட்ட இந்த நடைமுறை, செயற்கை நுண்ணறிவு (AI) வளர்ச்சியால் நிறுவனங்களுக்கு கூடுதல் நிதிச் சுமையாக மாறியுள்ளது.

ஒரு காலத்தில் மொத்த ஊழியர்களில் 20 முதல் 30 சதவீதம் வரை பெஞ்சில் வைத்திருந்த நிறுவனங்கள், அதை ஏற்கனவே 12 சதவீதமாக குறைத்துள்ளன. அடுத்த கட்டமாக 8 முதல் 10 சதவீதம் வரை மட்டுமே வைத்திருக்க திட்டமிடப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேபோல், பெஞ்சில் இருக்கும் காலமும் 4560 நாட்களில் இருந்து 3045 நாட்களாக சுருக்கப்பட்டுள்ளது.

இது உடனடி பணிநீக்க நடவடிக்கைக்கான அறிகுறி அல்ல என்றாலும், வேலைவாய்ப்பு கொள்கையில் பெரிய மாற்றம்ஏற்படப்போகிறது என்பதற்கான சுட்டிக்காட்டாகவே பார்க்கப்படுகிறது. தேவைக்கு அதிகமாக பணியாளர்களை முன்கூட்டியே நியமிக்கும் பழைய முறை படிப்படியாக கைவிடப்பட்டு, தேவைக்கேற்ப திறன் வாய்ந்தவர்களை மட்டுமே பணியில் அமர்த்தும் அணுகுமுறைக்கு நிறுவனங்கள் மாறி வருகின்றன.

குறிப்பாக ஏஐ, கிளவுட் கம்ப்யூட்டிங், சைபர் பாதுகாப்பு, டேட்டா அனலிட்டிக்ஸ் போன்ற புதிய தொழில்நுட்பங்களில் திறன் பெற்றவர்களுக்கே இனி முன்னுரிமை அதிகரிக்கும். தற்போதுள்ள ஊழியர்களுக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டாலும், அதில் தங்களை மேம்படுத்திக் கொள்ளத் தவறுபவர்கள் எதிர்காலத்தில் சவால்களை சந்திக்க நேரிடலாம்.

ஐடி துறையில் இனி அனுபவம் மட்டுமல்ல; தொடர்ந்து கற்றுக்கொள்ளும் திறன்தான் வேலைவாய்ப்பிற்கும், வேலை நிலைத்தன்மைக்கும் முக்கிய அடையாளமாக மாறுகிறது. AI காலத்தின் இந்த மாற்றத்தை உணர்ந்து, புதிய திறன்களை தொடர்ந்து கற்றுக்கொள்வதே ஐடி ஊழியர்களின் எதிர்காலத்தை பாதுகாக்கும் முக்கிய வழியாக இருக்கும்.

## உதயநிதி ஸ்டாலின் கைது: நாடாளுமன்ற வளாகத்தில் திமுக எம்பிக்கள் கடும் அமளி: தமிழகம் முழுவதும் திமுகவினர் ஆர்ப்பாட்டம்!



சென்னை, ஆக. 04–

தமிழக எதிர்க்கட்சித் தலைவரும், திமுக இளைஞரணிச் செயலாளருமான 'உதயநிதி ஸ்டாலின்' காவல் துறையினரால் கைது செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் 'திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள்' திடீர் கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. தஞ்சாவூரில் நடைபெற்ற காவிரி உரிமை மற்றும் விவசாயிகள் கடன் தள்ளுபடி தொடர்பான ஆர்ப்பா ட்டத்தில், எதிர்க்க ட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு பேசினார். அப்போது, முதலமைச்சர் மற்றும் தவெக அரசை விமர்சித்து அவர் பேசிய சில கருத்துகள் பெரும் சர்ச்சையை ஏற்படு த்தின. இதனைத் தொடர்ந்து, நடிகை திரிஷாவை இழிவுபடுத்தும் வகையில் பேசியதாகக் கூறி எழுந்த புகாரின் அடிப்படையில், காவல்துறையினர் நீலாங்கரையில் வைத்து உதயநிதி ஸ்டாலினைக் கைது செய்தனர். உதயநிதி ஸ்டாலின் கைது நடவடிக்கைக்கு முன்பாக, "காலை 12 மணி வரைகைதுநடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது" என சென்னை உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்ததாகக் கூறப்படுகிறது. இருப்பினும், நீதிமன்ற வழிகாட்டுதலை மீறி காவல்துறை அவரைக் கைது செய்துள்ளதாக திமுக தரப்பில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இந்தக் கைது நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, டெல்லியில் நடைபெற்று வரும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் போது, திமுக எம்பிக்கள் அனைவரும் நாடாளுமன்ற வளாகத்தில் ஒன்று கூடினர். தொடர்ந்து, "கைது செய்யாதே! கைது செய்யாதே!"""எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மீதான பழிவாங்கும் நடவடிக்கையைக் கைவிடு!" என முழக்கங்களை எழுப்பித் தங்களது பலத்த எதிர்ப்பைப் பதிவு செய்தனர். உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டு தஞ்சாவூர் அழைத்து செல்லப்படுவதை அடுத்து, தமிழகம் முழுவதும் திமுகவினர் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். இச்சம்பவம் தமிழக அரசியலிலும், டெல்லி நாடாளுமன்ற வட்டாரத்திலும் மிகப்பெரிய அரசியல் புயலைக் கிளப்பியுள்ளது.

## ராகுல்காந்தி - முதல் அமைச்சர் விஜய் சந்திப்பு நடைபெறாததற்கு காரணம்?



சென்னை, ஆக. 04–

மாமல்லபுரத்தில் நடந்த காங்., மாவட்ட தலைவர்களுக்கான பயிற்சி முகாம் நிறைவு விழாவில் பங்கேற்க, தமிழகத்துக்கு ராகுல் வந்தார். சென்னையில் தமிழக முதல்வர் விஜய்யை ராகுல் சந்திப்பார் என தகவல் பரவியது. ஆனால், சென்னைக்கு வந்த ராகுல், முதல்வர் விஜய்யை சந்திக்க வில்லை. இதுகுறித்து தமிழக காங்கிரஸ் நிர்வாகிகள் சிலர் கூறியதாவது:

ராகுலின் சென்னை நிகழ்ச்சி நிரலில், விஜயை சந்திக்கும் திட்டம் இல்லை என்பதை, தமிழககாங்., தலைவர் மாணிக் கம் தாகூர் ஏற்கனவே கூறி விட்டார். விஜய், ராகுல் இருவரும் சந்திக்காததற்கு, கருத்து வேறுபாடு காரணமல்ல.

'இந்தியா' கூட்டணி யில் இணைவது குறித்து, த.வெ.க., தலைமை எச்சரிக்கையுடன் செயல்படுகிறது. தமிழகத்தில், த.வெ.க., காங்., கூட்டணி அமைந்தாலும், 'இந்தியா' கூட்ட ணியில் இணைவதாக த.வெ.க., இதுவரை அறிவிக்கவில்லை. தமிழகத்தை மையப்படுத்தி, தனித்த அரசியல் அடையாளத்தை முன்னிலைப்ப டுத்த த.வெ.க., விரும்புகிறது.

மேலும், மத்திய அரசுடன் மோதல் போக்கை கடைப்பிடிக்க வேண்டாம் எனவும் த.வெ.க., கருதுவதால், 'இந்தியா' கூட்டணியில் சேர அவசரம் காட்டவில்லை. 'இந்தியா' கூட்டணியில், த.வெ.க., இணைவது குறித்து விஜய் முடிவெடுக்காமல் இருப்பதால், சென்னைக்கு வந்த ராகுலை, அவர் சந்திக்க திட்டமிடவில்லை."

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## பஸ் வசதி இல்லாத கிராமங்களுக்கு குட் நியூஸ்!




சென்னை, ஆக. 04–

தமிழகம் முழுதும் அரசு பஸ் இயக்கம் இல்லாத, அல்லது முன்பு இயக்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்ட வழித்தடங்கள் குறித்த விபரங்களை, கோட்டம் வாரியாக சேகரித்து, அறிக்கை அனுப்பும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் 20,000க்கும் மேற்பட்ட பஸ்கள் இயக்கப்பட்டாலும், சில கிராமங்களுக்கு இன்னும் அரசு பஸ் வசதி இல்லை.சிலவழித்தடங்களில் காலை, மாலை அல்லது இரவில் ஒரு சுற்று மட்டுமே பஸ் இயக்கப்படுவதாகவும், வார விடுமுறை நாட்களில் டவுன் பஸ் சேவை குறைவதாகவும் பயணியர் தொடர்ந்து புகார் தெரிவித்து வருகின்றனர்.

இதையடுத்து, வரும் செப்டம்பர் மாத தொடக்கத்தில் புதிய பஸ்களை இயக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, இதுவரை பஸ் செல்லாத மற்றும் இயக்கப்பட்டு, பின்னர் கைவிடப்பட்ட வழித்தடங்களில் மீண்டும் பஸ் சேவையை தொடங்க அரசு முடிவு செய்து உள்ளது. இதற்காக, கோட்டம் அளவில் அறிக்கை தயாரித்து அனுப்பும்படி, மேலாண்மை இயக்குநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

போக்குவரத்துக் கழக அதிகாரிகள் கூறுகையில், 'பஸ் வசதி இல்லாத கிராமங்கள் மற்றும் வழித்தடங்கள் தொடர்பான விபரங்கள், வட்டார போக்குவரத்துத் துறை மூலம் சேகரிக்கப்பட்டு, கலெக்டர்கள் வழியாக அரசுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. புதிய வழித்தடங்களில் பஸ் சேவை தொடங்கினால், மக்களிடம் நல்ல வரவேற்பு கிடைக்கும் என்பதால், மாநிலம் முழுதும் தற்போது விரிவான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன' என்றனர்.

## பி.எப். திட்டத்தில் சேர்வதற்கான சம்பள வரம்பு ரூ.25 ஆயிரமாக உயர வாய்ப்பு?



புதுடெல்லி, ஆக. 04–

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக மாற்றமின்றி இருந்து வந்த இந்த வரம்பு உயர்த்தப்பட்டால், ஒரு கோடிக்கும் மேற்பட்ட கூடுதல் பணியாளர்கள் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வருவார்கள் என தொழிலாளர் அமைச்சகத்தின் உள்மதிப்பீடு தெரிவிக்கிறது.

தற்போதைய விதிகளின்படி, மாதம் 15 ஆயிரம் ரூபாய் வரை அடிப்படை சம்பளம் பெறுவோர் பணியாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பணியாளர் ஓய்வூதியத் திட்டத்திலும் கட்டாயமாக சேர வேண்டும்.

இதற்கு மேல் சம்பளம் பெறுவோர் விருப்பத்தின் பேரில் சேரலாம். 20 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரியும் நிறுவனங்களில் இந்த விதி கட்டாயமாக அமல்படுத்தப்படுகிறது.

தற்போது 15,000 ரூபாய் சம்பள வரம்பின் அடிப்படையில், பணியாளர் 12 சதவீ தமாக 1,800 ரூபாய் பங்களிப்பு செய்கிறார். நிறுவனமும் அதே அளவு பங்க ளிப்பை வழங்குகிறது. இதில், 3.67 சதவீதம் பி.எப்., கணக்கிலும், 8.33 சதவீதம் பணியாளர் ஓய் வூதியத் திட்டத்திலும் செலுத்தப்படுகிறது.

சம்பள வரம்பு 25,000 ரூபாயாக உயர்த்தப்பட்டடால், பணியாளரின் மாதாந்திர பி.எப்., பங்களிப்பு 3,000 ரூபாயாக அதிகரிக்கும். நிறுவனமும் அதே அளவு பங்க ளிப்பு செய்ய வேண்டியி ருக்கும். இதன் வாயிலாக, பணியாளரின் பி. எப்., சேமிப்பும், ஓய்வூதிய நிதிக்கான பங்களிப்பும் அதிகரித்து, நீண்டகால சமூக பாதுகாப்பு வலுப்பெறும்.

எனினும், இந்த மாற்றத்தால் பணியாளர்கள் கையில் பெறும் மாதச் சம்பளம் ஓரளவு குறையலாம். அதே நேரத்தில், மத்திய, மாநில அரசுகள் மற்றும் தனியார் நிறுவனங்களின் ஊதியச் செலவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வரம்பு உயர்வுக்கு அடுத்தகட்டமாக மத்திய அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். அதன் பின்னர் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ஏற்பாடுகள் நிறைவடைந்த பிறகே புதிய விதிமுறை அமலுக்கு வரும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தரமற்ற உணவு விநியோகம்: ரெயில்வே உணவு ஒப்பந்த நிறுவனங்களுக்கு ரூ.5.13 கோடி அபராதம்!




புதுடெல்லி, ஆக. 04–

ரெயில்களில் தரமற்ற உணவு விநியோகம் மற்றும் சுகாதாரமற்ற சமையல் பெட்டிகள் தொடர்பாக வந்த புகார்களின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட உணவு ஒப்பந்த நிறுவனங்களுக்கு இந்திய ரெயில்வே ரூ.5.13 கோடி அபராதம் விதித்துள்ளது.

இந்தியாவில் ரெயில்கள் மற்றும் ரெயில் நிலையங்களில் பயணிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம், சமையல் கூடங்களின் சுகாதாரம் மற்றும் கூடுதல் கட்டணம் வசூலிப்பு போன்ற புகார்கள் மீது ரெயில்வே நிர்வாகம் விசாரணை நடத்தி நடவடிக்கை மேற்கொண்டது. விதிகளுக்குப் புறம்பாகச் செயல்பட்ட உரிமதாரர்களின் ஒப்பந்தங்களை ரத்து செய்தல் மற்றும் விநியோகம் செய்பவர்களைக் கருப்புப் பட்டியலில் சேர்த்தல் போன்ற கடுமையான நடவடிக்கைகளையும் ரெயில்வே நிர்வாகம் மேற்கொண்டது.

மேலும், ரெயில்களில் கடந்த 3 ஆண்டுகளாக தரமற்ற உணவு விநியோகம் மற்றும் சுகாதாரமற்ற சமையல் பெட்டிகள் தொடர்பாக வந்த புகார்களின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட உணவு ஒப்பந்த நிறுவனங்களுக்கு இந்திய ரயில்வே ரூ.5.13 கோடி அபராதம் விதித்துள்ளது.


ரெயில்வே அமைச்சகத்தின் தரவுகளின்படி, இந்திய ரெயில்வேயில் ஆண்டுதோறும் சுமார் 58 கோடி உணவுப் பொட்டலங்கள் பயணிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. இதில் உணவின் தரம் குறித்து வரும் புகார்களின் எண்ணிக்கை 0.0008 சதவீதம் மட்டுமே என்று அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டுள்ளார். மேலும், நாடாளுமன்ற மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்துப்பூர்வமாகவும் பதில் அளித்துள்ளார்.

உணவின் தரத்தை மேலும் உயர்த்த ரயில்வே வாரியம் பல்வேறு நவீன தொழில்நுட்பங்களை புகுத்தி வருகின்றன. ஐஆர்சிடிசி மூலம் இயக்கப்படும் முக்கிய சமையல் கூடங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு, சமையல் முறைகள் நேரலையாகக் கண்காணிக்கப்படு கின்றன.

பயணிகள் ரெயில்களில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதைத் தடுக்க, பிஓஎஸ் இயந்திரங்கள், யுபிஐ மற்றும் கியூஆர் குறியீடு மூலம் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை முறைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. உணவுப் பொட்டலங்களின் தரம் மற்றும் எடையை உறுதி செய்யத் தொடர் ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.



## மறைந்திருக்கும் ஆளுமையின் ரகசியம்!



நம்மில் பலர் வாழ்க்கையில் சிக்கல்கள் ஏற்படும் போது இறைவழிபாடு, கோயில் தரிசனம், ஜாதகம் பார்ப்பது, ரத்தினக் கற்கள் அணிவது போன்ற பல்வேறு பரிகாரங்களை மேற்கொள்கிறோம். ஆனால், நம் நிதிநிலை, நடத்தை மற்றும் வாழ்க்கைப் பாதையை தீர்மானிப்பதில் நமக்குள் மறைந்திருக்கும் ஆளுமை முக்கிய பங்கு வகிக்கிறது என்று ஜோதிட அறிஞர்கள் கூறுகின்றனர்.

### தனிமனித மாற்றமே மிகப் பெரிய பரிகாரம்

செல்வ வளம், குடும்ப மகிழ்ச்சி, மன அமைதி போன்றவற்றை பெற பலர் பலவித ஆன்மிக வழிகளை பின்பற்றுகிறார்கள். ஆனால், இவை அனைத்தையும் விட முக்கியமான பரிகாரம் தனிமனித மாற்றம் என கருதப்படுகிறது.

ஒவ்வொருவருக்கும் பரிந்துரைக்கப்படும் நல்ல செயல்கள் மற்றும் ஆன்மிக பரிகாரங்களை தொடர்ந்து பின்பற்றும் போது, அவர்களின் ஆளுமையில் நேர்மறை மாற்றங்கள் உருவாகின்றன. அந்த மாற்றங்களே நல்ல வாழ்க்கைக்கான பாதையை அமைக்கின்றன.

### உணர்வுகளும் பிரபஞ்ச சக்தியும்

மனிதனின் உணர்வுகளும் எண்ணங்களும் பிரபஞ்ச சக்தியுடன் இணையும் போது, வாழ்க்கையில் நல்ல மாற்றங்கள் நிகழும் என ஜோதிடம் கூறுகிறது.

வெளிப்புற தோற்றம் அல்லது செயற்கையான நடத்தை மனநிறைவை தராது. உண்மையான உணர்வுகளையும் அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையையும் வளர்த்துக் கொண்டால், மன ஆற்றல் வலுப்பெற்று வாழ்க்கையில் முன்னேற்றம் காண முடியும்.

### ஒவ்வொருவருக்குள்ளும் இரண்டு ஆளுமைகள்

ஜோதிடக் கருத்துப்படி, ஒவ்வொரு மனிதருக்குள்ளும் இரண்டு விதமான ஆளுமைகள் இருக்கின்றன.

உண்மையான இயல்பு: பிறப்பிலிருந்தே உள்ள குணநலன்.

மறைந்திருக்கும் ஆளுமை: வெளிப்படையாக தெரியாதாலும், சூழ்நிலைகளில் வெளிப்பட்டு வாழ்க்கையை பாதிக்கும் தன்மை.

ஒரு திறமையான ஜோதிடர், ஒருவரின் எண்ணங்களையும் நடத்தையையும் புரிந்து கொண்டு, அவரின் ஆளுமையை மேம்படுத்த வழிகாட்ட முயற்சிப்பார்.

### உணர்வுகளை அடக்குவது பாதிப்பை ஏற்படுத்தும்

பலர் தங்களின் உண்மையான உணர்வுகள், ஆசைகள் மற்றும் திறமைகளை வெளிப்படுத்தாமல் மனதிற்குள் அடக்கி வைக்கிறார்கள். இவ்வாறு நீண்ட காலம் அடக்கப்படும் உணர்வுகள், மறைமுகமாக வாழ்க்கையில் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.

அந்த உணர்வுகளை ஆரோக்கியமான முறையில் வெளிப்படுத்தத் தொடங்கினால், வாழ்க்கையில் உண்மையான மாற்றங்கள் உருவாகும்.

### போலியான ஆளுமை வாழ்க்கையை பாதிக்கும்

கோபம், பயம், விரக்தி, சோகம் போன்ற உணர்வுகளை தொடர்ந்து அடக்கி வைக்கும் போது மன வலிமை குறையலாம். இதனால் பலர் போலியான ஆளுமையுடன் வாழத் தொடங்குகிறார்கள். இது அவர்களின் உண்மையான திறமைகளை வெளிப்படுத்த முடியாத நிலையை உருவாக்குகிறது.

ஒருவர் தனது மன உணர்வுகளுக்கு உண்மையாக வாழத் தொடங்கும் போது மட்டுமே, அவருடைய விதியும் அவருக்கு சாதகமாக அமையும் என்று ஜோதிடக் கருத்து வலியுறுத்துகிறது.

## அசாம் வெள்ளம்; பாதிப்பு- 1.3 லட்சம் - பலி -87



அசாம், ஆக. 04–

"மேகாலயாவின் கிழக்கு காசி மலைகள், மேற்கு ஜெயின்டியா மலைகள் மற்றும் கிழக்கு ஜெயின்டியா மலைகள் ஆகிய பகுதிகள் மற்றும் அருணாச்சல பிரதேசத்தின் பாபும்பரே, குருங் குமே, கிழக்கு காமெங், கிழக்கு சியாங், லோஹித் மற்றும் சாங்லாங் மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய மிக கனமழை (ஆரஞ்சு மற்றும் சிவப்பு எச்சரிக்கைகள்) பெய்யக்கூடும். இது அசாமின் அண்டை மாவட்டங்களை பாதிக்கலாம்" என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாகாலாந்தின் பெரும்பாலான பகுதிகளுக்கு 'மஞ்சள் எச்சரிக்கை' (கண்காணிப்பு) விடுக்கப்பட்டுள்ளதாகவும், இது அசாமின் சாரைடியோ, சிவசாகர், ஜோர்ஹாட் மற்றும் கோலாகாட் மாவட்டங்களை பாதிக்கக்கூடும் என்றும் அது கூறியது. அசாம் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் (ASDMA) அறிக்கைப்படி, கடந்த 24 மணி நேரத்தில் சிவசாகர் மாவட்டத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். இந்த உயிரிழப்புகளுடன், இந்த ஆண்டு வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 87–ஐ எட்டியுள்ளது.

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## 40+ பெண்கள்: 10 ஆரோக்கிய குறிப்புகள்!



1. தினமும் 30 நிமிடம் நடைப்பயிற்சி
2.சத்தான உணவை தினமும் சேர்க்கவும்
3. கால்சியம் & வைட்டமின்–D மறக்காதீர்கள்
4. 78 மணி நேரம் தூங்குங்கள்
5. போதுமான தண்ணீர் குடியுங்கள்
6. ஆண்டுக்கு ஒரு முறை முழு உடல் பரிசோதனை
7. மன அழுத்தத்தை கட்டுப்படுத்துங்கள்
8. புகை, மது பழக்கத்தை தவிர்க்கவும்
9. உடல் எடையை சீராக வைத்திருங்கள்
10. சிரித்து மகிழ்ச்சியாக வாழுங்கள்



ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சிவகுரு பிரபாகரன் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார். மாவட்ட வருவாய் அலுவலர் வ.சங்கரநாராயணன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# சினிமா துளிகள்..!

## அஜித் குமாரின் கிளாடியேட்டர்ஸ்! அடுத்தடுத்து வெளியான பட அறிவிப்புகள்!




அஜித் குமாரின் ரேஸிங் வாழ்க்கையை மையப்படுத்தி எடுக்கப்பட்டுள்ள படத்தின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

நடிகர் அஜித் குமார் நடிப்பில் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கிய குட் பேட் அக்லி திரைப்படம் வெளியாகி ஒன்றரை ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், அடுத்தப் பட அறிவிப்பு வெளியாவதில் தாமதம் ஏற்பட்டது.

இடையில் கார் ரேஸிங், தயாரிப்பாளர் கிடைக்காதது போன்ற காரணங்களால் ஏகே–64 பற்றி எந்தத் தகவலும் இல்லாமல் இருந்தன. இந்த நிலையில், பல மாதக் காத்திருப்புக்குப் பின்னர் ரசிகர்களுக்கு விருந்தாக அஜித்தின் 64–வது பட அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மீண்டும் இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் அஜித் நடிக்கும் இப்படத்திற்கு 'டேர் டெவில்' (Dare devil) எனப் பெயரிட்டுள்ளனர். முதல்முறையாக அஜித்தின் மனைவி ஷாலினி இந்தப் படத்தின் மூலம் தயாரிப்பாளராக அறிமுகமாகிறார். தயாரிப்பு நிறுவனத்திற்கு பிரேவ் ஹார்ட்ஸ் புரடக்‌ஷன்ஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார்.

இதனைத் தொடர்ந்து, மீண்டும் ஒரு அறிவிப்பை படக்குழு வெளியிட்டு ரசிகர்களை கொண்டாட வைத்துள்ளனர்.

இயக்குநர் விஜய் இயக்கத்தில் அஜித்தின் ரேஸிங் வாழ்க்கையைப் மையப்படுத்திய படத்தின் அறிவிப்பும் இன்று வெளியாகியுள்ளது. இந்தப் படத்திற்கு 'கிளாடியேட்டர்ஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது அவரது ரேஸிங் பற்றிய ஆவணப்படமாக எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஜிவி பிரகாஷ் இசையமைத்துள்ள இப்படத்தையும் ஷாலினியே தயாரிக்கின்றார். அஜித்தின் அடுத்தடுத்த பட அறிவிப்புகளால் ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர்.

# தமிழக பட்ஜெட் ஆக. 5–ல்: முக்கிய அறிவிப்புகள்...!




சென்னை, ஆக. 04–

நிகழ் நிதியாண்டுக்கான முழுமையான நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் பணிகள் கடந்த 2 மாதங்களாக நடைபெற்றன. பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய புதிய திட்டங்கள், ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள திட்டங்களின் முன்னேற்றம், பல்வேறு துறைகளின் செயல்பாடுகள், தேர்தல் வாக்குறுதிகளில் நிறைவேற்றக்கூடிய அறிவிப்புகள் உள்ளிட்டவை குறித்து முதல்வர் விஜய் தலைமையில் ஜூலை 2 முதல் 31–ஆம் தேதி வரை துறைவாரியாக ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இதற்கிடையே, தமிழக சட்டப்பேரவைக் கூட்டம் ஆக. 5–ஆம் தேதி தொடங்கும் என்று பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகர் அறிவித்தார். அதன்படி, அன்றைய தினத்தில் பொது பட்ஜெட்டும், வியாழக்கிழமை (ஆக. 6) வேளாண் பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட உள்ளன.

மகளிர் உரிமைத் தொகை உயர்வு, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டங்கள் உள்பட பல்வேறு அறிவிப்புகள் அதில் இடம்பெறலாம் எனத் தெரிகிறது. 'வெற்றித் தமிழகம்' என்ற பெயரில் தமிழக அரசின் ஐந்தாண்டு தொலைநோக்குத் திட்டத்தில் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்தல், உயர் கல்விக்கு பிணையில்லாமல் ரூ.20 லட்சம் வரை கல்விக் கடன், புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் உள்பட பல்வேறு அம்சங்களும் பட்ஜெட்டில் இடம்பெற உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# தமிழக பா.ஜ.க. தலைவர் மாற்றம்?



சென்னை, ஆக. 04–

தமிழகத்தில் பா.ஜ.க.வை வலுப்படுத்தவும், இளைஞர்களை ஈர்க்கவும் கட்சியில் புதிய மாற்றத்தை கொண்டு வரவும் விரைவில் புதிய தலைவரை நியமிக்க பா.ஜ.க. திட்டமிட்டுள்ளது. தற்போதைய தலைவர் நயினார் நாகேந்திரன் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தான் மாநில தலைவராக பதவியேற்றிருந்தார். அவரது தலைமையில் ஒரே ஒரு தேர்தலை மட்டும் சந்தித்த நிலையில் இந்த மாற்றம் நிகழ இருக்கிறது.

புதிய மாநிலத் தலைவரை நியமிப்பதற்கான ஆலோசனை இறுதிக்கட்டத்தை எட்டி இருக்கிறது. 2029–ம் ஆண்டு நடக்க இருக்கும் நாடாளுமன்ற தேர்தலை மனதில் கொண்டே புதிய தலைவரை தேர்வு செய்யும் பணி தொடங்கியுள்ளது. புதிய தலைவர் பட்டியலில் மாநில பொதுச்செயலாளர் ராம சீனிவாசன், முன்னாள் எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன், மூத்த தலைவர் எச்.ராஜா, சரத்குமார், மாநிலச் செயலாளர்கள் அஸ்வத்தாமன், வினோஜ் பி.செல்வம் ஆகியோரின் பெயர்கள் பரிசீலனையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

மேலும், மத்திய மந்திரியாக இருக்கும் நிர்மலா சீதாராமனையும் தமிழக அரசியலுக்கு கொண்டு வரலாமா? என்பது குறித்தும் மத்திய பா.ஜ.க. தலைமை யோசித்து வருகிறது. விரைவில் தமிழக பா.ஜ.க. புதிய தலைவர் யார்? என்பது தெரிந்து விடும்.


# தமிழ்நாட்டில் ஆட்டோ கட்டணம் உயர்வு?

சென்னை, ஆக. 04–

தமிழ்நாட்டில் ஆட்டோ கட்டணம் உயர்வுக்கான அறிக்கை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் திருத்தப்பட்ட புதிய கட்டணம் விரைவில் வெளியாகும் என போக்குவரத்து ஆணையரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தமிழ்நாட்டில் ஓடும் 3.46 லட்சம் ஆட்டோக்களுக்கு கட்டணம் நிர்ணயம் செய்து 13 ஆண்டுகள் ஆகிவிட்டன. புதிய கட்டணநிர்ணயம் குறித்து சென்னையில் கடந்த மாதம் 9–ம் தேதி முத்தரப்பு பேச்சுவார்த்தை நடந்தது.

இந்த பேச்சுவார்த்தையில் 30–க்கும் மேற்பட்ட தொழிற்சங்க நிர்வாகிகளும், பயணியர் அமைப்புகளில் இருந்து 90 பேரும் பங்கேற்றனர். தொழிற்சங்கங்கள் தரப்பில் குறைந்தபட்ச கட்டணத்தை, 70 ரூபாயாக உயர்த்த வலியுறுத்தினர். பயணியர் அமைப்புகளின் நிர்வாகிகள் தரப்பில், குறைந்தபட்ச கட்டணம் 50 ரூபாயாக நிர்ணயம் செய்ய வலியுறுத்தினர்.

# மீனாட்சி அம்மன் கோயிலில் தொடரும் சர்ச்சைகள்?





மீனாட்சி கோயிலில் சித்திர கவி கல் சேதம்!

பழமை மாறாமல் சீரமைக்க பக்தரகள் கோரிக்கை

மதுரை, ஆக. 04–

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க சித்திர கவி கல் இடிந்து சேதமடைந்துள்ளதால் பக்தர்கள் மற்றும் வரலாற்று ஆர்வலர்கள் கவலை அடைந்துள்ளனர்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள கம்பத்தடி மண்டபம் நிலவாயில் பகுதியில் அமைந்துள்ள சித்திர கவி கல், திருஞானசம்பந்தர் தொடர்புடைய வரலாற்றுச் சின்னமாக கருதப்படுகிறது. வீரவசந்த ராயர் மண்டபத்தில் பசுபதி நாதர் சன்னதி அருகில் திருஞான சம்பந்தர் அருளிய "திருஎழு கூற்றிருக்கையின் சித்திரக்கவி" தேர் வடிவில் மார்பில் கல்லில் செதுக்கப்பட்டிருந்தது

கடந்த 2018 டிசம்பர் 17–ஆம் தேதி கோயிலில் நடைபெற்ற சீரமைப்பு பணிகளின் போது இந்தக் கல் அகற்றப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், தற்போது கல் இடிந்து சேதமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. சேதமடைந்த கல் துண்டுகள் கோயில் வளாகத்தில் காணப்பட்டதால் பக்தர்கள் அதிர்ச்சி அடைந்தனர். பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த இந்த வரலாற்றுச் சின்னம் சேதமடைந்துள்ளது வேதனை அளிப்பதாக பக்தர்கள் தெரிவித்துள்ளனர். தொல்லியல் நிபுணர்கள் மற்றும் பாரம்பரிய கட்டடப் பாதுகாப்பு வல்லுநர்களின் ஆலோசனையுடன், பழமை மாறாமல் சித்திர கவி கல்லை மீண்டும் சீரமைத்து அதன் அசல் வடிவில் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கல்வெட்டுகள், சிற்பங்கள் மற்றும் பாரம்பரியச் சின்னங்கள் அனைத்தையும் முறையாகப் பராமரித்து பாதுகாக்க இந்து சமய அறநிலையத்துறை மற்றும் கோயில் நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பக்தர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# மஜக திருப்பூர் மாவட்ட செயலாளர் பிராண்டு ஹக்கீம் இல்லத்திருமண விழா!



பல்லடம், ஆக. 04–

மஜக திருப்பூர் மாவட்ட செயலாளர் பிராண்டு ஹக்கீம் இல்ல திருமண விழாவில் மணமக்களை வாழ்த் தினார்கள் மஜக மாநில பொதுச் செயலாளர் எஸ்.எஸ். ஹாரூன் ரசீது திருப்பூர்மாநகர்மாவட்ட செயலாளர் தெற்கு தொகு MLA எஸ். பால முருகன் திருப்பூர் மேற்கு மாவட்ட செயலாளர் ஜி.கே. சங்கர் விஜிலன்ஸ் பத்திரிகை

நிர்வாகிகள். திருப்பூர்தெற்கு தொகுதி கொள்கை பரப்பு அணி அமைப்பாளர் எஸ். காதர்மீரான் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி சிறப்பித்தார்கள். விழாவில் பல் சமய நட்புறவு கழகத்தின்தலைவர் ஷாஜஹான், தமிழ் மாநில மக்கள்முன்னேற்றக் கழக

தலைவர் முத்து முஹம் மது, த.வெ.க.மாவட்ட இணைச் செயலாளர் சுகு மார்,மாவட்ட இளைஞரணி செயலாளர் அப் பாஸ்,மாவட்டத்துணைச் செயலாளர் கார்த் திக்,வடக்கு பகுதி செய லாளர் விஜயகுமார், த. வெ.க.நிர்வாகிகள்பாண் டியன், அமர்நாத், மோகன்,சாமி, பல் சமய நட்புறவு கழகம் நிர்வா கிகள்மாவட்ட துணை தலைவர் நூர் முகமது,மாவட்ட கழக பேச் கருப்பச்சாமி ,மாவட்ட சாளர் பாண்டி துணைச் செயலாளர் அர் ஷத் அலி, வடக்கு இளைஞர் அணி செயலாளர் ரபீக், பல்லடம் ஒன்றிய தலைவர் உபைதுர் ரஹ்மான், கேப் டன்பாபு, மஜக, பல் சமய நட்புறவு கழகம், நிர்வாகி களும் திருமண விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்..



இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், சக்கரக்கோட்டை ஊராட்சி, குமரைய்யா கோயிலில் சாலை பணிகளை தொழிலாளர் நலத்துறை ஆணையர் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் டாக்டர் மா.வள்ளலார் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சிவகுரு பிரபாகரன் உடன் இருந்தார்.



பழனியில் புதிய எம்எல்ஏ அலுவலக திறப்பு விழாவில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர்கள், எஸ்பி.வேலுமணி, சிவி சண்முகம், நத்தம் விஸ்வநாதன், கேபி அன்பழகன் ஆகியோர் கூட்டாக பேட்டி அளித்தனர். அருகினில் பழனி தொகுதி ரவி மனோகரன் எம் எல் ஏ உள்ளார்.

# வேலை வாய்ப்பு

## தேசிய இன்சூரன்ஸ் நிறுவனத்தில் 500 பணியிடங்கள்!

நிறுவனம்: தேசிய இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (NICL)
பணி வகை: உதவியாளர் (Assistant)
மொத்த காலியிடங்கள்: 500
வேலை வகை: நிரந்தர பணி (Regular)
பணியிடம்: இந்தியா முழுவதும்
தகுதி: அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பம் தொடக்கம்: 18.07.2026
விண்ணப்பிக்க கடைசி தேதி: 07.08.2026
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://nationalinsurance.nic.co.in/

குறிப்பு: மத்திய அரசு நிறுவனத்தில் நிரந்தர வேலை தேடும் இளைஞர்களுக்கு இது சிறந்த வாய்ப்பாகும். தகுதியுள்ளவர்கள் கடைசி தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

# பழனியில் பழமையான ஓலைச்சுவடிகள் வைத்து சிறப்பு பூஜை!



பழனி, ஆக. 04–

பழனி அடிவாரம் ஸ்ரீ போகர் புலிப்பாணி சித்தர் ஆசிரமத்தில், ஆடி 18 முன்னிட்டு, புலிப்பாணி சித்தர் பயன்படுத்திய ஓலைச்சுவடிகளுக்கு, ஆடி 18 யொட்டி மலர் வழிபாடும், சிறப்பு பூஜையும் நடைபெற்றது. இதை பழனி ஆதினம் போகர் சிவானந்த புலிப்பாணி பாத்திர சுவாமிகள், தொடங்கி வைத்து சிறப்பு பூஜை செய்தனர். அதன் பின்பு அங்குள்ள தொட்டச்சி அம்மனுக்கு வளையல்கள் வைத்து சிறப்பு பூஜை செய்யப்பட்டது. இதில் சண்முகானந்தா என்ற ஜம்பு சாமிகள், இளைய பட்டம் செல்வநாதன், மற்றும் யோகநாதன் டாக்டர் பன்னீர்செல்வம், டாக்டர் கல்பனா உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# வல்வில் ஓரிக்கு அமைச்சர்கள் மரியாதை!



ஈரோடு , ஆக. 04–

கடையேறு வள்ளல்களில் ஒருவரான சுதந்திர போராட்ட தியாகி வழ்வில் ஓரி நினைவு நாளை முன்னிட்டு ஈரோடு மாவட்டம் வடுகப்பட்டி புதூரில் அலங்கரிக்கப்பட்ட அவரது திருவுருவ படத்திற்கு அமைச்சர்கள் கே.ஏ செங்கோட்டையன், விஜய் பாலாஜி, லோகேஷ், விஜயலட்சுமி, கமலி, ஆகிய 5 அமைச்சர்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இதேபோல் காங்கிரஸ் கட்சி சார்பில் மாவட்டச் செயலாளர் முத்துக்குமார் தலைமையில் ஈரோடு மாநகர் மாவட்ட செயலாளர் ராஜேஷ் ராஜப்பா உள்ளிட்டோர் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர். மதிமுக சார்பில் மாவட்டச் செயலாளர் செந்தில்நாதன் தலைமையில் மாநகர் மாவட்ட செயலாளர் முருகன் சாதிக் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். த வ க சார்பில் மாவட்ட செயலாளர் ஆலயம் கார்த்தி தலைமையில் பரமசிவம், இம்மானுவேல், ஏ ஜி ரவி,வடிவேல், பழனிச்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்வில் ஓரி படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். விழாவிற்கான ஏற்பாடுகளை வள்ளல் வல்வில் ஓரி வாரிசுதாரர் ஓ எஸ் டி, ஓ எஸ் செங்கோடு, முனுசாமி, வி கே விஸ்வநாதன், அம்பிகாபதி விஸ்வநாதன், ஓ.டி கதிர்வேல், ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். சுதந்திரப் போராட்ட தியாகி வல்வில் ஓரிக்கு மணிமண்டபம் அமைத்திடக் கோரி அமைச்சர்களிடம் விழா கமிட்டி சார்பில் கோரிக்கை மனு அளித்தனர்.






# பனிமயமாதா சிறப்பு மலர்

## தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் (TUJ)

உலக புகழ் பெற்ற தூத்துக்குடி பனிமய மாதா அன்னையின் 444 வது ஆலய திருவிழாவிற்கு வருகை தரும் அனைவரையும் வருக! வருக! என அன்புடன் வரவேற்கிறோம்

தோழர் டி.எஸ். ரவீந்திர தாஸ் – முன்னாள் பத்திரிகையாளர் சங்க தலைவர்

தோழர் டி.எஸ். ஆர். சுபாஷ் – பத்திரிகையாளர் சங்க தலைவர்

தூத்துக்குடி மாவட்டம்

தலைவர் இருதய ஞான ரமேஷ் | செயலாளர் கோடீஸ்வரன் | பொருளாளர் சாந்தகுமார்

தேசிய குழு உறுப்பினர்கள்: அலெக்ஸ் புருட்டோ, கி.ம சங்கர்

---

இந்த வீட்டு சுவாமி துணை கன்னி சுவாமி துணை

## செல்வி Snacks

MURUKKU

Crispy & Tasty!

தயாரிப்பு: தாமரைசெல்வி ஸ்நாக்ஸ் அண்ட் ஸ்வீட். தூத்துக்குடி.

---

## மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கம், தூத்துக்குடி

தூத்துக்குடி உலக புகழ் பெற்ற தூத்துக்குடி பனிமய மாதா அன்னையின் 444 வது ஆலய திருவிழாவிற்கு வருகை தரும் அனைவரையும் வருக! வருக! என அன்புடன் வரவேற்கிறோம்

---

SOUTH INDIA'S NO.1 CALL TAXI & CAB

TUTICORIN 24x7

FRIENDS TRACK (P) LTD

0461 ANY TIME ANY WHERE

2 33 33 44 • 7402333344

CHENNAI : 044-26 25 66 65 | MADURAI : 0452-2 66 77 77 | KOVILPATTI : 04632-2666 66 | TRICHY : 0431-255 5577 | ALL OVER TAMILNADU

---

J. RAJENDRAN B.Com., B.L., Cell : 94880 50212

ADVOCATE & COMMISSIONER OF OATH

Resi : 2H/1171/1, Kathirvel Nagar West, Near RC Church, Tuticorin - 628 008. 0461-4983653

Office : 127D/2, Pandian Anbu Complex, Palai Road, Tuticorin - 628 002. rajendranbl13@gmail.com

---

தூத்துக்குடி ! உலக புகழ் பெற்ற தூத்துக்குடி பனிமய மாதா அன்னையின் 444 வது ஆலய திருவிழாவிற்கு வருகை தரும் அனைவரையும் வருக! வருக! என அன்புடன் வரவேற்கிறோம்

| M. சரவணக்குமார் | ந. தமிழரசன் | சக்தி |
|---|---|---|
| பாலதண்டாயுத நகர் (மாதா நகர்) | நிலவணிகம் | ரியல் எஸ்டேட் தூத்துக்குடி |
| 7373077031 | 9842290000 | 7708557476 |

அன்னை அருள் புரிவாளாக!

---

தேவனாலே எல்லாம் கூடும்

V. மணிகண்டன் 97912 53422, 84286 79009

ஆன்ட்ரியா பில்டர்ஸ்

38, தெற்கு சம்பந்தமூர்த்தி தெரு, தூத்துக்குடி - 2.

---

## அற்புதம் மருத்துவமனை

மக்கள் நலனில் உங்கள் பேராதரவுடன் கூடுதல் வசதிகளுடன்

Arputham Hospital

We Treat God Heals

39/1,39/LA தேவர்புரம் ரோடு, (நீதிபதிகள் குடியிருப்பு எதிரில்), தென்பாகம் காவல் நிலையம் பின்புறம், தூத்துக்குடி.

Phone : 04612310066 / 94889 62266

Web : www.arputhamhospital.com

Email : arputhamhospital@gmail.com

24/7 Emergency Services

- ICU
- Well Equipped Operation Theatre
- 24×7 Laboratory
- Physiotherapy Unit
- X-ray C-arm
- USG, Echo, Doppler

---

அம்மு பேக்கரி

செல்: 96004 49201, 94883 56849

1/97, கீழத்தெரு, வாலசமுத்திரம், மதுரை நான்கு வழிச்சாலை, தூத்துக்குடி.

---

அரசன் வறுகடலை

செல்: 99521 62514, 95430 67000

8, முனிசிபல் காம்ப்ளக்ஸ், காய்கனி மார்க்கெட் அதிரில், பாளை ரோடு, தூத்துக்குடி–628 001.

---

## தூத்துக்குடி உலக புகழ் பெற்ற தூத்துக்குடி பனிமய மாதா அன்னையின் 4444 வது ஆலய திருவிழாவிற்கு

வருகை தரும் அனைவரையும் வருக! வருக! என அன்புடன் வரவேற்கிறோம்

---

## நம்ம உழவன் இயற்கை அங்காடி

89402 56706 | 84388 79706

132 D, ஜெயலானி தெரு தொடர்ச்சி, வேலவன் ஹைபர் மார்க் அருகில், தூத்துக்குடி-628002.

THIRU. MARIA DOSS

Namma Uzhavan Organic Store – Everything Organic. Under one roof.

89402 56706, 84388 79706

132 D, Jeyalani Street Extension, Near Velavan Hyper Market, Thoothukudi-628002.

THIRU. MARIA DOSS

---

SRI ASSOCIATES CONSTRUCTION

SWARAJ. V
SENIOR CONSULTANT (CIVIL) / PROPERITOR.

+91-63838 62265

sriassociatesconstruction@gmail.com

www.sriassociates.in

38/23 welcome colony 1st street, annanagar west extension, Chennai-600101.

---

## KK பிராண்ட் பருப்பு வகைகள்

தூய்மை ! தரம் ! சுவை !

உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்கும், நாவில் சுவை தரும் சமையலுக்கும் சிறந்த ஊட்டச்சத்து நிறைந்த நிறைந்த பருப்பு வகைகளை தேடுகிறீர்களா ? இதோ உங்களுக்காக பாரம்பரியம் மிக்க KK பிராண்டு பருப்பு வகைகள்

எங்கள் தயாரிப்புகள் :

- துவரம் பருப்பு - 1kg, 1/2kg, 30 kg, 50 kg,
- உருட்டு உளுந்தம் பருப்பு -1kg, 1/2kg, 30kg, 50 kg,
- பாசி பருப்பு - 1kg, 1/2kg, 30kg, 50 kg
- தொலி பருப்பு - 30kg, 50 kg

சில்லறை விற்பனை நிலையம் : வேலவன் ஹைபர் மார்க்கெட் பின்புறம், தூத்துக்குடி

கடை விலாசம் : தெற்கு ராஜா தெரு தூத்துக்குடி

செல் : 96778 85535 / 98849 89544

உங்கள் நம்பிக்கை... எங்கள் தரம்... உங்கள் ஆரோக்கியம்!

---

இதோ உன் தாய்

ஒற்றுமையே நமது பலம்

## பனிமய மாதா ஆலய திருவிழா நல்வாழ்த்துக்கள்

அன்னையை காண வரும் பக்தர்கள் அனைவரையும் வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்...

தூத்துக்குடி மாவட்ட கிரேன் உரிமையாளர்கள் நலச்சங்கம்

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020